உ

சிவமயம்

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



வவுனியா

# இந்து மாமன்றம்

## 15 ஆண்டு நிறைவு விழா மலர்.

# சிவபுராணம்

பொருளுரை : அகளங்கன்

இந்து மாமன்ற வெளியீடு இல - 7

14 - 04 - 1997

உ
சிவமயம்

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



வவுனியா

# இந்து மாமன்றம்

## 15 ஆண்டு நிறைவு விழா மலர்.

# சிவபுராணம்

பொருளுரை : அகளங்கன்

இந்து மாமன்ற வெளியீடு இல - 7

**14 - 04 - 1997**

# ஆசியுரை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என்ற சிவ வாக்குக்கு ஒப்ப வவுனியாவில் இந்துமாமன்றம் 15 வருடங்களாக பல சமயப் பணிகளை சீராக நடாத்தி வருவதையிட்டு பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

1982 ம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்து மாமன்றம் பல உறுப்பினர்களின் அரிய தொண்டினால் வளர்ச்சியடைந்து இலங்கையில் வருடம் தோறும் திருவாசக முற்றோதல்களையும் பன்னிரு திருமுறை முற்றோதல்களையும் சிறப்பாக கொண்டாடும் ஸ்தாபனமாகத் திகழ்வதை மிகப் பெருமையாக நினைவு கூருகிறேன். இந்து மாமன்றத்தை ஆரம்பித்த பெரியோர்களை அவர்கள் பாதங்களில் பணிந்து பாராட்டுகிறேன்.

இந்து மாமன்றம் சைவசமயப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயல்படுவது சங்க உறுப்பினர்களுடைய சிறப்பாகும். அதிலும் தலைவர் திரு. சீ. ஏ. இராமஸ்வாமி அவர்கள் சிறப்பாக இயங்குவது பாராட்டத்தக்கது. தொடர்ந்து இம்மன்றம் பாலர் பாடசாலைகளை கிராம ரீதியில் நடாத்த திட்டமிட்டுள்ளதை பாராட்டுகிறேன்.

வணக்கம்.

இறைபணிச் செம்மல்.
திருவாசகச் செல்வர்
**வை. செ. தேவராஜா.**

உ
சிவமயம்

# இந்து மாமன்றத் தலைவரின் கருத்து

**14 - 04 - 1997** இந்து மாமன்றத்தின் **15** ஆண்டு நிறைவு நாள். ஆண்டுதோறும் பன்னிரு திருமுறை முற்றோதலின் ஞாபகார்த்த வெளியீடுகளை ஆக்கித் தந்துதவுகின்றஅகளங்கன் ஆசிரியர் அவர்கள், **15** ஆண்டு நிறைவு ஞாபகார்த்த நூலையும் வெளியீடு செய்ய உதவ முன்வந்துள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த "சிவபுராணம்" பொருளுணர்ந்து பாடவும், அடியார்கள் உண்மையை உணரவும், வாய்ப்பு உண்டானது பெரும் பேறே ஆகும்.

இந்து மாமன்றத்தின் ஆரம்ப காலம் தொட்டு தொடர்புடைய திரு. அகளங்கன் அவர்கள் **15** வருட வரலாற்றினைத் தொகுத்து அளித்துள்ளார். சிறந்த சமய அறிவும் எழுத்தாற்றலும் இந்து மாமன்றத்தினுடனான தொடர்பும் அவரது பணியை இந்து மாமன்றத்திலிருந்து விலக முடியாமல் பிணைத்து விட்டுள்ளது.

மேலும் இந்து மாமன்றம் கடந்த காலங்களில் நற்பணியாற்ற வழி நடாத்திய இறைவன், எதிர் காலத்திலும் சிறப்புறச் செயல்படக் கருணை கூர்வான் என்ற நம்பிக்கையுடன் – இந்து மாமன்ற வெளியீடுகளை ஆக்கித்தரும் ஆசிரியர் அகளங்கன் அவர்களிற்கு சகல வளங்களையும் குறைவின்றி வழங்கி அருள்புரிய வேண்டுவோமாக.

**சீ. ஏ. இராமஸ்வாமி.**
தலைவர்.



# முன்னுரை

இந்து மாமன்றத்தின் 15 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இம்மலரில் சிவபுராணத்திற்கு உரை எழுதிச் சேர்க்கும் பணி திருவருளால் என்னிடம் விடப்பட்டது.

ஏற்கனவே எனது பன்னிரு திருமுறை அறிமுகம் மற்றும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் (மூதுரை) ஆகியவற்றிற்கு நான் எழுதிக் கொடுத்த விளக்கவுரைகளை இந்து மாமன்றம் வெளியிட்டிருந்தது.

திருவாசகத்தின் பாயிரம் போல அமைந்திருக்கும் சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து ஓதுபவர்கள் மிகக்குறைவு. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" சிவபுரத்தில் சிவனடிக்கீழ்ச் சென்றிருப்பார்கள் என்று மணிவாசகப் பெருந்தகை பாடியிருந்தும் பலர் பொருளை உணர்ந்து ஓதுவதில்லை.

பொருளை உணர்வதற்கு முன்பு பொருளை அறிதல் முக்கியம். எனவே தான், சிவபுராணத்திற்கு வரிக்கு வரி உரை எழுதி வெளியிடவேண்டியுள்ளது.

இந்து மாமன்றத்தின் செயலாளர் இறைபணிச் செம்மல் வை. செ. தேவராஜா அவர்கள் சிவபுராணத்திற்கு உரை எழுதி வெளியிட வேண்டும் என்ற தனது ஆவலைப் பல தடவை என்னிடம் கூறியுள்ளார்.

இந்து மாமன்றத் தலைவர் திரு சீ. ஏ. இராமஸ்வாமி அவர்கள் அதனைச் செயற்படுத்த என்னைத் தூண்டினார். அதன் பெறுபேறே இந்நூல்.

பெரிய எழுத்தில் தெளிவாக இதனை அச்சிட்டுத் தந்த சுதன் அச்சகத்திற்கு என் நன்றிகள் என்றும் உரியன. எமது இம் முயற்சியின் பொருளுணர்ந்து, சைவ அன்பர்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகின்றோம்.

**பம்பைமடு,** உங்கள்
**வவுனியா.** அன்பு
**14 - 04 - 1997** **அகளங்கன்.**

## தொடக்கம் : 14 - 04 - 1982

செயற்குழுவில் அமர்ந்து சிறப்புச் சேர்த்தோர்.

### முதற் குழு:

தலைவர் : திரு. ந. செல்லையா
செயலாளர் : திரு. ரி. பாலதயானந்தன்
பொருளாளரும், இணைச் செயளாளரும் :
திரு. சீ. ஏ. பாலசுப்பிரமணியம்.
உப தலைவர் : திரு. ரி. துரைராஜா.
துணைச் செயளாளர் : திரு. வி. சதாசிவம்.
போஷகர்கள் :
சிவஸ்ரீ. இ. பாலச்சந்திரக் குருக்கள் அவர்கள்,
திருமுருக மாமணி. ஆ. தியாகராஜா அவர்கள்,

### நிர்வாக உறுப்பினர்கள் :

திரு. நா. தர்மராஜா (அகளங்கன்),
திரு. விஜயேந்திரன், திரு. நவரெத்தினம்.

### இரண்டாம் குழு : 14 - 06 - 1992

தலைவர் : திரு. சீ. ஏ. இராமஸ்வாமி
செயலாளர் : திரு. இ. கிருபாமூர்த்தி
பொருளாளர் : திரு. க. சபாபதி
உப தலைவர் : திரு. த. கந்தையா
உப செயலாளர் : திரு. அ. சிவநாதன்.
போஷகர் : சிவஸ்ரீ. இ. பாலச்சந்திரக் குருக்கள் அவர்கள்.

### நிர்வாக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. செ. தருமரெத்தினம் | திரு. பா. யோகநாதன் |
| திரு. வை. பாலச்சந்திரன் | திருமதி. நா. தருமலிய்கம் |
| திரு. இ. வீரசிங்கம். | திரு. வை. செ. தேவராசா. |

### மூன்றாம் குழு

தலைவர் : திரு. சீ. ஏ. இராமஸ்வாமி
செயலாளர் : இறைபணிச் செம்மல். வை. செ. தேவராசா
பொருளாளர் : திரு. க. சபாபதி
உப தலைவர் : திரு. மு. மாணிக்கவாசகர்
உப செயளாளர் : திரு. க. அமிர்தலிங்கம்
காப்பாளர் : திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள்

### நிர்வாக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. இ. சண்முகம் J. P | திரு. ஆ. பெரியண்ணன் |
| திரு. ரி. கே. இராஜலிங்கம் J. P | திரு. இ. வீரசிங்கம் |
| திரு. பெ. பழனிவேல் J. P | திரு. ஆ. நவரத்தினராஜா |



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய



விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணு ணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்.





# சிவபுராணம். (பொருளுரை)

திருச்சிற்றம்பலம்.

**01. நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க.**
"நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்வதாக, யாவற்றிற்கும் தலைவனாகிய சிவபெருமானது திருவடி வாழ்வதாக.

**02. இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**
கண் இமைக்கும் சிறுகாலப் பொழுதுகூட, என் நெஞ்சை விட்டு விலகாத சிவபெருமானது திருவடி வாழ்வதாக.

**03. கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க.**
திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டருளிய மிகச் சிறந்த பரமாச்சாரியாரது திருவடி வாழ்வதாக.

**04. ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.**
முத்திநெறி கூறும் ஆகமத்தின் உட்பொருளாக நின்று, உயிர்களைத் தன்னிடத்து நெருங்கச் செய்யும் சிவபெருமானது திருவடிகள் வாழ்வதாக.

**05. ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க.**
ஒருருவானவனும், பல்உருவானவனும் ஆகிய சிவபெருமானது திருவடி வாழ்வதாக.

**06. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க.**
ஆணவ மலத்தின் ஆதிக்கத்தை அழித்து அடியேனை ஆட்கொண்டருளிய சிவபெருமானது திருவடி வெற்றி பெறுக.

**07. பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க.**
பிறவியை அழிக்கும், அழகிய சடாமுடியைக் கொண்ட சிவபெருமானது, உள்ளீடு பரல்கள் இடப்பட்ட வீரக்கழல்கள் பொருந்திய, திருவடிகள் வெற்றி பெறுக.

**08. புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க.**
தன்மேல் அன்பில்லாதவர்க்குத் தூரத்தே உள்ளவனான சிவபெருமானது, பூப்போன்றதும் வீரக்கழல்கள் அணியப்பட்டதுமான, திருவடிகள் வெற்றி பெறுக.

**09. கரம் குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க.**
கைகள் குவித்து வணங்கும் அன்பர்களது உள்ளம் மகிழ்வதற்குக் காரணமாகிய, சிவபெருமானது திருவடிகள் வெற்றி பெறுக.

**10. சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க.**
தலை தாழ்த்தி வணங்குவாரை உயர்விக்கும் சிறப்புடைய சிவபெருமானது திருவடிகள் வெற்றி பெறுக.

**11. ஈசன் அடி போற்றி. எந்தை அடி போற்றி.**
சிவபெருமானது திருவடிக்கு வணக்கம். எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குகின்ற எமது தந்தையாம் சிவபெருமானது திருவடிக்கு வணக்கம்.

**12. தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி**
ஞான ஒளிவீசும் வடிவுடைய பரமாச்சாரியாரது திருவடிக்கு வணக்கம். சிவபெருமானது சிவந்த திருவடிக்கு வணக்கம்.

**13. நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி**
அடியார்களது அன்புக்குள் அகப்பட்டு நின்ற மலபந்தமில்லாத இறைவனது, திருவடிக்கு வணக்கம்.

**14. மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி**
மாயையினால் உண்டாகும் பிறவியை முற்றாக அழிக்கும் தலைவனான சிவபெருமானது திருவடிக்கு வணக்கம்.

**15. சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி**
சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில் பரமாச்சாரியாராய் எழுந்தருளி, நம்மை ஆட்கொண்டருளிய எமது கடவுளது திருவடிக்கு வணக்கம்.

**16. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி**
தெவிட்டாத இன்ப அருவியைத்தந்தருளும் மலை போன்ற, இறைவனுக்கு வணக்கம்.

**17. சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,**
சிவபெருமானாகிய இறைவன் என் மனதில் நீங்காது நின்ற காரணத்தால்



**18. அவன் அருளாலே அவன்தாள் வணங்கி**
அச்சிவபெருமானது திருவருளினாலே, அச்சிவபெருமானது திருவடியை வணங்கி

**19. சிந்தை மகிழச் சிவ புராணந் தன்னை**
மனம் மகிழ்ச்சியடையும் படியாகச் சிவபுராணத்தினை

**20. முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்**
முற்பிறப்பில் செய்த வினை முழுவதும் அழிந்து போக அடியேன் கூறுவேனாயினேன்

**21. கண் நுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்து எய்தி**
நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான், திருப்பெருந் துறையில் பரமாச்சாரியாராக வந்து சேர்ந்து, தனது அருள் நாட்டத்தை என்மேற் செலுத்த

**22. எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி**
நினைத்தற்கும் எட்டாத அழகு பொருந்திய திருவடிகள் பூமியில் தாழ்ந்து

**( கண் நுதலான் எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி வந்து எய்தி, தன் கருணைக் கண் காட்ட அவன் சிவன் என் சிந்தையுள் நின்ற அதனால், அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, முந்தை வினை முழுதும் ஓய, சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை யான் உரைப்பன்.**

நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான், நினைத்தற்கும் எட்டா அழகு பொருந்திய, வீரக்கழல் அணிந்த திருவடிகள், பூமியில் தாழ்ந்து, திருப்பெருந்துறையினிடத்து பரமாச்சாரியாராக வலிய வந்தருளி, தன் அருட் பார்வையை என்மேல் செலுத்தியதனால், அச்சிவபெருமான் என் மனதில் நீங்காது நிலைபெற்றுவிட, அவனது திருவருளினாலே அவனது திருவடிகளை வணங்கி, முற் பிறவி வினை முழுதும் அழிந்து போகவும், மனம் மகிழ்ச்சியடையவும், சிவ புராணத்தினை யான் கூறுவேனாயினேன்)

**23. விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்**
விண்ணுலகம் முழுவதும் நிறைந்தும், மண்ணுலகம் முழுவதும் நிறைந்தும், அவற்றுக்கு அப்பாலுமாய் நிறைந்தவனே, பிரகாசம் விளங்குகின்ற ஒளிவடிவினனே.

**24. எண் இறந்து எல்லை இலாதானே நின்பெரும் சீர்**
மனத்தினால் நினைத்துப் பார்க்கவும் முடியாத வரையறை அற்றவனே, நினது பெரிய சிறப்பினை

**25. பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்**
தீவினை உடையேனாகிய யான், நின் அருளாலன்றிப் புகழ்ந்துரைக்கும் வழி ஒன்றையும் அறிகிலேன்.

**26. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி**
புல் ஆகியும், பல்வகைப் பூண்டுகளாகியும், புழுவாகியும், மரமாகியும்,

**27. பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பு ஆகிப்**
பல்வகைப்பட்ட மிருகங்களாகியும், பல்வகைப் பறவைகளாகியும், பாம்புகளாகியும்

**28. கல்ஆய் மனிதர்ஆய்ப் பேயாய்க் கணங்கள் ஆய்**
கல்லாகியும், மனிதராகியும், பேய்களாகியும், கணங்கள் ஆகியும்,

**29. வல் அசுரர் ஆகி முனிவர் ஆய்த் தேவர் ஆய்ச்**
வலிய அசுரர் ஆகியும், முனிவர் ஆகியும், தேவர் ஆகியும்

**30. செல்லாஅநின்ற இத் தாவர சங்கமத்து உள்**
நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் என்னும், இருவகைப் பொருள் களுள்ளே,

**31. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்.**
எல்லாப் பிறவிகளிலும் பிறந்து, இளைப்படைந்து விட்டேன் எம்பெருமானே

**32. மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்.**
உண்மையாகவே, உன் பொன்போன்ற திருவடிகளைக் கண்டு, இப்பொழுது அப்பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை அடைந்து விட்டேன்.



**33. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற**
அடியேன் உய்யும் பொருட்டு, என் உள்ளத்துள் ஓம் என்னும் பிரணவ உருவாய் நின்ற

**34. மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
மெய்யனே, மலபந்தம் அற்றவனே, இடபத்தை ஊர்பவனே வேதங்கள்

**35. ஐயா என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே**
ஐயனே என அழைக்கவும், அவற்றுக்கெல்லாம் எட்டாது மேல் உயர்ந்தும்,
கீழ் ஆழ்ந்தும், பரந்தும் அமைந்த நுட்பமான பொருளாய் உள்ளவனே

**36. வெய்யாய், தணியாய், இயமானன் ஆம் விமலா**
ஞாயிற்றின் வெம்மையையும், திங்களின் குளிர்ச்சியையும் உடையவனே. உலகை இயக்குகின்ற தலைவனாக விளங்குகின்ற நிர்மலனே

**37. பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி**
பொய்யாக இருப்பவைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கும் படியாகக் குரு வடிவில் வந்து அருள் செய்து

**38. மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே**
மெய் அறிவாகி விளங்குகின்ற உண்மை ஒளியே

**39. எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே**
எவ்வகையான அறிவும் இல்லாதவனாகிய எனக்கு, இன்பத்தைத் தருகின்ற பெருமானே

**40. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே**
அறியாமையை நீங்கச் செய்யும் நல்ல அறிவுருவானவனே

**41. ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்**
தோற்றமும், நிலைத்திருக்கும் கால அளவும், முடிவும் இல்லாதவனே,
எல்லா உலகங்களையும்

**42. ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்**
படைப்பாய், பாதுகாப்பாய், ஒடுக்குவாய், முடிவில் உயிர்கட்கு அருள் பாலிப்பாய்

**43. போக்குவாய் என்னைப், புகுவிப்பாய் நின் தொழும்பின்**
என்னை அப்பல்வகைப் பிறவிகளிற் செலுத்திப் போகங்களில் மூழ்கச் செய்வாய், பின்னர் என்னை நின் திருவடித் தொண்டில் ஈடுபடும்படி அருள்செய்வாய்

**44. நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே**
பூவில் மணம்போல இருப்பவனே, அன்பரல்லாதவர் உணராமையின் தூரத்தில் இருப்பவனே, அன்பர் உணர்தலின் அண்மித்திருப்பவனே

**45. மாற்றம், மனம் கழிய நின்ற மறையோனே**
சொல்லுக்கும், மனத்திற்கும் அப்பாற்பட்டு நின்ற மறைபொருளாயுள்ளவனே

**46. கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
பசுவிற் கறந்த பால் சர்க்கரையொடு தேனும் கலந்தால் எப்படி இருக்குமோ அப்படி

**47. சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று**
சிறப்புற்று அடியவர்களது சிந்தனையில் தேன் போல இனிமை ஊற்றெடுக்குமாறு நிலைபெற்றுத் தங்கி

**48. பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்**
அவ் அடியவர் எடுத்த பிறவியை நீக்கும் எங்கள் சிவபெருமான்

**49. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த**
பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்னும் ஐந்து நிறங்களை உடையவனே, தேவர்கள் உன்னைத் துதிக்கவும்

**50. மறைந்திருந்தாய் எம்பெருமான், வல்வினையேன் தன்னை**
அவர்களிற்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே, எம் பெருமானே, வலிய வினை வசப்பட்டவனாகிய என்னை



**51. மறைந்திட மூடிய மாய இருளை**
அறிவு மறையும்படி மூடிய ஆணவ மலமாகிய இருளை

**52. அறம், பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி**
நல்வினை, தீவினை என்னும் அரிய வலிய கயிறுகளால் கட்டி

**53. புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி**
வெளியே தோலைப் போர்த்து அதனால் உடம்பெங்குமுள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மூடியுள்ள

**54. மலம் சோரும் ஒன்பது வாயிலக் குடிலை**
அழுக்குகள் கழிகின்ற ஒன்பது வழிகளுடைய உடம்பாகிய குடிசை

**55. மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**
கலங்கும் படி ஐம்புலன்களும் வஞ்சனையையே செய்ய

**56. விலங்கு மனத்தால் விமலா உனக்குக்**
அவற்றிலிருந்து விலகும் மனங்கொண்ட காரணத்தால் நிர்மலனே உன்னிடத்துக்

**57. கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்**
கலந்த அன்புடையேனாகி நெகிழ்ந்து மனம் உருகும்

**58. நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி**
நன்மை இல்லாத சிறியேனுக்கு அக்குடிசையினைத் தந்து

**59. நிலம் தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி**
இந்நிலவுலகத்தே குருவடிவில் எழுந்தருளி வந்து எல்லையற்ற பெருமை பொருந்திய திருவடிகளைக் காட்டியருளி

**60. நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு**
நாயினும் கீழ்ப்பட்டவானாகக் கிடந்த அடியேனுக்கு

**61. தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**
தாயினும் சிறந்த கருணைவடிவான உண்மைப் பொருளாயுள்ளவனே

**62. மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே**
களங்கம் இல்லாத ஒளிவிரிந்த மலரின் ஒளிபோன்றவனே

**63. தேசனே தேனார் அமுதே சிவபுரனே**
குரு முதல்வனே, முதன்மை பொருந்திய அமுதம் போன்றவனே,
சிவபுரத்து இறைவனே

**64. பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே**
ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் பிணிப்பினை
அழித்து மெய்யறிவினை வளர்க்கும் தலைவனே

**65. நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்**
நின்னிடத்தில் அன்பு வைத்தற்குரிய அருளைத் தந்து, என்
மனத்திலுள்ள பொய்மையாகிய குற்றங்கள் அற்றுப் போக

**66. பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே**
என் மனத்தினின்றும் நீங்காது நிலைபெற்று நின்ற பெரிய
கருணையாகிய பெரிய ஆறாக உள்ளவனே

**67. ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே**
தெவிட்டாத அமுதம் போன்றவனே, எல்லை இல்லாத
இயல்பினையுடைய பெருமானே

**68. ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே**
நின்னை உணர்ந்து கொள்ளாதவரின் உள்ளத்தில் வெளிப்படாது
மறைந்திருக்கும் ஒளிவடிவானவனே

**69. நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே**
என் மனதை நீர் போல் உருகச் செய்து என் அரிய உயிருக்கு
உயிராய் நின்றவனே

**70. இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே**
இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டும் இல்லாதவனே,
அடியவர்களிற்காக இன்பமும் துன்பமும் உள்ளவனே



**71. அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்**
அன்பருக்கு அன்பாக அருள் செய்பவனே, எல்லாப்
பொருள்களுமாகி, அவையல்லாத வேறுமாகியும் உள்ள

**72. சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே**
ஒளிபொருந்தியவனே, நெருங்கிய இருளை உடையவனே
யாருக்கும் புலனாகாத பெருமை உடையவனே

**73. ஆதியனே, அந்தம் நடு ஆகி அல்லானே**
எல்லாவற்றிற்கும் முதலாகியிருப்பவனே, முடிவும், நடுவும், ஆகி,
ஆதியும் அந்தமும் நடுவும் அல்லாதவனுமாய் இருப்பவனே

**74. ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே**
என்னை வலியவந்து கவர்ந்து அடிமை கொண்டருளிய எமது
தந்தையாகிய பெருமானே

**75. கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டு உணர்வார் தங்கருத்தின்**
கூரிய மெய்ஞ் ஞானமாகிய அறிவின் துணை கொண்டு
உணர்பவர்களது கருத்தினாலும்

**76. நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே**
அறிதற்கரிய கருத்துப் பொருளே, நுணுகி உணர்தற்கும் அரிய நுண்ணிய
உணர்வுப் பொருளே,

**77. போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே**
போதலும், வருதலும், பொருந்தி இருத்தலும் இல்லாத, புண்ணிய
முதல்வனே,

**78. காக்கும் எம் காவலனே காணரிய பேரொளியே,**
எல்லாவற்றையும் காக்கும் எம் அரசனே, எல்லை காண அரிய
பேரொளி
வடிவினனே

**79. ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற**
இன்ப ஆற்றின் வெள்ளம் போன்றவனே, அப்பனே, யாவற்றிலும்
மேம்பட்ட நிலையில் நின்ற

**80. தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்**
தோற்றத்தினுடைய பிரகாசிக்கும் ஒளியாகியும், சொல்லுதற்கியலாத நுண்ணிய உணர்வாகியும்

**81. மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்**
மாறுபாட்டினையுடைய இவ்வுலகத்தில் உயிர்களிற்கு வெவ்வேறு நிலமையில் வந்து அருள் செய்தலால் அறியப்படும்

**82. தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்**
தெளி பொருளாகியுள்ளவனே, தெளிவினிற் தெளிவே என் மனத்தினுள்ளே

**83. ஊற்றான உண்ணார் அமுதே உடையானே**
ஊற்றாய்ச் சுரக்கின்ற உண்ணற்கினிய அரிய அமுதே, யாவற்றையும் உடையவனே,

**84. வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப**
வெவ்வேறு மாறுபாடுகளை உடைய, விடம் பொருந்திய ஊன் உடம்பினுள்ளே கிடக்கத்

**85. ஆற்றேன் எம் ஐயா, அரனே ஓவென்றென்று**
தாங்கமாட்டேன், எமது தலைவனே, அரசனே, ஓ என்று பலதடவை ஓலமிட்டு அழைத்து

**86. போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்**
வணங்கிப் புகழ்ந்து தொண்டராமிருந்து, பொய்மையான நினைவு, சொல், செயல்களெல்லாம் அழிந்து மெய்த் தொண்டரானவர்

**87. மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே**
திரும்பவும் இவ்வுலகத்தில் வந்து வினைகளுக்கு இடமாகிய பிறவியில் பொருந்தாமல்

**88. கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே**
வஞ்சகத் தன்மை பொருந்திய புலன்களின் வழிச் செல்லும் ஐம் பொறிகளின் வீடாகிய, எடுத்த உடம்பின் பந்தத்தினை அழிக்க வல்லவனே



**89. நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே**
உலகம் முழுவதும் அழிந்து போய் ஏற்படுகின்ற செறிந்த இருளிலே திருக்கூத்தினைப் பலகாலும் ஆடுகின்ற தலைவனே

**90. தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே**
தில்லைச் சிற்றம்பலத்திலே கூத்தாடுபவனே, தெற்கே அமைந்திருக்கும் பாண்டி நாட்டை ஆட்சி செய்து, திருவிளையாடல் புரிந்து, இருப்பிடமாகக் கொண்டவனே

**91. அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று**
துன்பந்தரும் பிறவிப் பிணியினை அழிப்பவனே, ஓவென்று அழைத்து முறையிட்டு

**92. சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்**
சொல்லிப் பாராட்டுதற்கும் அரிய பெருமை கொண்டவனை, இயன்ற மட்டும் பாராட்டி, திருவடியின் கீழிருந்து யான்

**93. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
பாடிய பாடல்களின் பொருளுணர்ந்து ஓத வல்லவர்கள்

**94. செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்**
**95. பல்லோரும் ஏத்தப் பணிந்து.**
**(சிவபுரத்தின் உள்ளார் பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவனடிக்கீழ்ச் செல்வர்.)**
சிவபுரத்திலுள்ள சிவ கணத்தவர் பலரும் பணிந்து வணங்கித் துதிக்க சிவன் திருவடிக்கீழ்ச் சென்று இன்புற்றிருப்பர்.

திருச்சிற்றம்பலம்.



## வெளியிடப்பட்ட நூல்கள்

1. புதிய மண்டபத் திறப்பு விழா மலர் 30-10-1993
2. பன்னிரு திருமுறை அறிமுகம் 01-01-1994 (அகளங்கன்)
3. ஆத்திசூடி (விளக்கவுரை) 01-01-1995 (அகளங்கன்)
4. மேன்மை கொள் சைவநீதி 01-01-1995 (நே. சிவன் இலங்கை - வங்கி வவுனியா)
5. கொன்றைவேந்தன் (விளக்கவுரை) 01-01-1996 (அகளங்கன்)
6. வாக்குண்டாம் (மூதுரை) விளக்கவுரை 10-01-1997 (அகளங்கன்)
7. 15 ஆண்டு நிறைவு மலர் 14-04-1997
சிவபுராணம் (பொருளுரை) அகளங்கன்.

## இந்துமா மன்றத்தினால்க் கௌரவிக்கப் பெற்றோர்

**தமிழ்மணி உடுவை. எஸ். தில்லைநடராசா, அவர்கள்**

**தமிழ்மணி அகளங்கன் அவர்கள்**

**திரு செ. ரங்கநாதன் அவர்கள்**

**சைவப்புலவர் திருமதி. தங்கேஸ்வரி தங்கராசா அவர்கள்**

**திரு. த. சுந்தரம்பிள்ளை அவர்கள். (கள்ளிக்குளம் வவுனியா.)**

**சைவப்புலவர் திரு. செ. குணபாலசிங்கம் அவர்கள்**

**வாகீச கலாநிதி. திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்**

**திரு. இ. சண்முகம் J.P அவர்கள் (அறங்காவலர் கோவிற்குளம் சிவன் கோவில்)**

**திரு. ஆ. நவரத்தினம் அவர்கள் (அறங்காவலர் கோவிற்குளம் சிவன் கோவில்)**



## இந்துமா மன்றத்தின் முக்கிய செயற்பாடுகள்

* திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை வவுனியாவிற்கு அழைத்து, கந்தசுவாமி கோவிலில் சொற்பெருக்காற்றுவித்தமை.

* 1) திருமுருக மாமணி ஆ. தியாகராஜா அவர்களின் கந்தபுராண தொடர் சொற்பொழிவு
  2) சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் அவர்களின் பெரியபுராண இசைத் தொடர் செற்பொழிவு
  3) அகளங்கன் அவர்களின் மகாபாரதத் தொடர் சொற்பொழிவு

  ஆகியவற்றைத் திறம்பட நடத்தியமை

* ஆலயங்கள் பாடசாலைகள் போன்றவற்றில் சமய விழாக்களை, குருபூசைகளைச் செய்தமை.
* நூல்களை வெளியிடுதல்.
* பன்னிரு திருமுறை முற்றோதலும், பூர்த்தி விழாவும்.
* சமயப் பெரியார்களைக் கௌரவித்தல்.
* புராணபடனங்கள்.
* திருவாசக முற்றோதல்கள்.
* திருப்புகழ் முற்றோதல்.
* மாதந்தோறும் ஆன்மீகப் பௌர்ணமி விழாக்கள்.
* குருபூசை சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல்.
* சமய வளர்ச்சிக்கான பல்வேறு பங்களிப்புக்கள்.
* பன்னிரு திருமுறைச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல்.

சுதன் அச்சகம் - வவுனியா.

# இந்நூல் வெளியீட்டுக்கு நிதி உதவிய அன்பர்கள்

01. திரு. வேலும் மயிலும் கணேசமூர்த்தி

அவர்கள்

(பிரதான வீதி, மாத்தளை)

02. பல.நோ.கூ.சங்கம்

(துனுக்காய்)

03. நாட்டிய எழில் திருமதி. சூரியயாழினி

அவர்கள்

(நடன ஆசிரியை, வ.த.ம.ம.வித்)

04. திரு. பரமசாமி உதயச்சந்திரன்

அவர்கள்

(உதயன்ஸ் லொட்ஜ் ☎ 024-22120)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே.

திருச்சிற்றம்பலம்.

(திருவாசகம்)